நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: CC 588/2021

வழக்கு சாட்சி : PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருஞானம் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சோமசுந்தரம் | | : | |
| கிராமம் | : | | வயது | : | 62/ 2026 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **11.02.2026**

(1வது எதிரி ஆஜர். இரண்டாம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. )

**மனுவின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

குற்றத்தின் வீரியத்தை பொறுத்து புலன்கொள்தகு குற்றம் மற்றும் கொள்தகா குற்றம் என குற்றவியல் நடைமுறை சட்டத்தில் இரு வகையான குற்றங்கள் உள்ளது. COGNIZABLE குற்றங்களுக்கு நீதிமன்றத்தின் அனுமதியின்றி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும். இவ்வழக்கு தாக்கல செய்யப்பட்ட குற்றங்களானது COGNIZABLE குற்றங்கள் என்றால் சரி. இவ்வழக்கின் புகாருக்கு யார் மனு எண் கொடுத்தார்கள் என்றால் தற்போது நினைவு இல்லை. இவ்வழக்கு புகாரில் சொல்லப்பட்ட குற்றங்களானது COGNIZABLE குற்றங்கள் என்பதால் மனு எண் கொடுத்திருக்காமல் நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்க வேண்டும் என்றால் சரி. புகார் பெற்று 24 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான காரணம் ஆய்வாளருக்கு தெரியும். சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.